RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1619

OPEN ACCESS

# சேலம் மாவட்டம் தேக்கம்பட்டி வட்டார நாட்டுப்புற விளையாட்டுக்கள்

**வீ. கோகிலா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Folk Games in Thekkampatti of Salem District

**V. Gokila** [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts & Science College for Women, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: moorthigokila1993@gmail.com

Received: 28-06-2022
Revised: 28-09-2022
Accepted: 16-10-2022
Published: 12-12-2022

Check for updates

**ABSTRACT**

Folk literature is in use from the early days itself. Folk literature is just the expression of the people's mind. Folk literature studies the customs, traditions and beliefs of the people. It is the mirror that clearly shows the lifestyles of the people. These people had many entertainments in their life such as singing songs, telling stories and playing games. Just like the origin of human history cannot be ascertained, the origin of folk literature also cannot be ascertained. Folklore literature is about the people's life style and their activities. Folklore literature is very famous and it captured people's heart. People's life is filled with games, stories, arts, songs and proverbs. When compared to other literary genre in Tamil, folklore literature is something different that is the absence of author. This literature especially tells about the games and how it entertains people and strengthen their body.

**Keywords:** Folk Literature, Tradition, Beliefs, Proverbs.

## முன்னுரை

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலைப் பற்றி ஆராய்வது நாட்டுப்புறவியல். நாட்டுப்புற விளையாட்டுக்கள் அவற்றின் ஒரு கூறாகும். மக்களின் அன்றாட வாழ்க்கை முறைகளோடு விளையாட்டுகள் இணைந்துள்ளது. விளையாட்டு என்பது வெளித்தூண்டல்கள் இன்றி மகிழ்ச்சியூட்டும் செயல்களில் ஒன்றாக அமைகிறது. உடல்நலம், மனநலம் பேணுபவையாகவும் உள்ளது. குழந்தைகளின் இயல்புகளும் வெளிப்படுத்தப்படுகின்றன. வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களம் என்றும் கூறலாம். விளையாட்டு என்பது அமைப்புடைய ஆட்டமாகவும் போட்டியை ஏற்படுத்துவதாகவும் வெற்றியை நிர்ணயிக்கும் விதிகளைக் கொண்டதாகவும் அமைகிறது. விளையாட்டின் மூலம் மக்களின் மனவளர்ச்சி உடல்வளர்ச்சி, மகிழ்ச்சி இவை அனைத்தும் இடம்பெறுகின்றன.

## நாட்டுப்புறவியலின் பண்புகள்

நாட்டுப்புறவியலைக் குறிக்கும் Folklore என்ற சொல்1846 ல் வில்லியம் ஜான்தாமஸ் அவர்களால் உருவாக்கப்பெற்றது. இதற்கு பின்னரே நாட்டுப்புறவியலில் முறையான ஆய்வு தொடங்கியது. நாட்டுப்புற இலக்கியத்திற்கு ஐந்து முக்கியப் பண்புகள் இருப்பதாக ஜான் ஹெரால்டு பிருண்வார்ட் கூறுகிறார். 1. வாய்மொழியாகப் பரவுவது, 2. மரபு வழிப்பட்டது, 3. பல்வேறு வடிவங்களாகத் திரிபடைதல், 4. ஆசிரியர் இல்லாமை, 5. ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்குவது" (Sakthivel, 2010).

## விளையாட்டு

விளையாட்டு என்பது வெளித்தூண்டல்கள் இன்றி மகிழ்ச்சி ஊட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவதாகும். விளையாட்டு என்பது மன மகிழ்ச்சி ஊட்டும் செயல் மட்டுமல்லாமல் உடல்நலம், மனநலம் பேணுபவையாகவும் உள்ளது. பண்டைக்காலத்தில் மகளிர்க்கு எனவும், ஆடவர்க்கு எனவும் தனித்தனியே விளையாட்டுக்கள் இருந்தன. சிறுவர்களும் சிறுமியர்களும் கூடியும் விளையாடுவர்.

"கூடி வரும் வழக்கின் ஆடியற் பெயர்" (Subash Chandra Bose, 2016)

"பண்ணைத் தோன்றிய எண் நான்கு கிளவியும்"

என்று வரும் தொல்காப்பிய நூற்பாக்கள் இதன் தொன்மைக்குச் சான்று பகர்கின்றன (Sivalinganar, 1985).

## நாடோடி மக்களின் பிரதிபலிப்பு- விளையாட்டு

காட்டுமிராண்டியாகக் காடுகளில் அலைந்து திரிந்த மனிதன். பல்வேறு இடையூறுகளுக்கிடையேயும் இன்னல்களுக்கிடையேயும் அவன் வாழத் தொடங்கினான். அதனால் அவர்கள் வாழ்க்கையே ஒரு போராட்டமாக இருந்தது. அவ்வாறு "நாடோடி வாழ்க்கை வாழும்போது மிருகங்களும் பறவைகளும் இயற்கையில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்ட மனிதன் தானும் விளையாட ஆசைப்பட்டிருக்க வேண்டும்" அன்றை மக்களின் வாழ்க்கை முறை வேட்டை வினையை அடிப்படையாகக் கொண்டது.

மனிதர்கள் தற்காப்பிற்காகத் தாண்டவும் ஓடவும் நீந்தவும் மரமேறவும் மனிதன் பழகியிருந்தான். இதன் விளைவாகத் தான் விளையாட்டுகளான தாண்டுதல், நொண்டி அடித்தல், கோலிக் குண்டு விளையாடுதல், ஓடிபிடித்தல், கண்ணாமூச்சி போன்றவை தோன்றியிருக்கலாம்.

## நாட்டுப்புற வட்டார விளையாட்டுக்கள்

நாட்டுப்புற மக்களின் நாகரிகத்தோடும் பண்பாட்டோடும் விளையாட்டு இணைந்ததாகும். விளையாட்டின் பொழுது மக்கள் மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமின்றி உடல் ஆரோக்கியத்திற்காகவும் விளையாடினர். ஆண், பெண் என இருவரும் விளையாடும் விளையாட்டு அமைகின்றன. பாடல் உள்ளவை, பாடல் இல்லாத விளையாட்டுக்கள் என வகைப்படுத்தினர்.

## சிலம்பாட்டம்

சிலம்பாட்டம் என்பது வீரத்தின் அடிப்படையில் எழுந்த விளையாட்டாகும். கையிலுள்ள கம்பினை வீசி ஒலியெழுப்பி விளையாடும் விளையாட்டிற்குச் சிலம்பாட்டம் என்று பெயர். கம்பு வீசுந்திறன், காலடி எடுத்து வைக்கும் முறை, வேகமாக வீசுந்திறன் இவை அனைத்தும் சிலம்ப விளையாட்டின் அடிப்படையாகும். இந்த விளையாட்டானது இன்றும் மக்களிடையே நிலவி வருகிறது. "இந்த விளையாட்டானது உடற்பயிற்சி, தற்காப்பு, போராட்டம் ஆகிய நோக்கங்களைக் கொண்டு விளங்குகிறது. தனிமனிதன் தன் கலைத்திறனை விளக்கவும் இக்கலையில் இடமுள்ளது. வேகம், திடீரெனச் சுழற்சி மாற்றுதல், முன்பின் திரும்பி ஆடல் ஆகியவற்றில் கவர்ச்சியும் வியப்பும் உள்ளன என்பார் (Sanmugasundharam, 2001). வீரத்தின் காரணமாகவே சிலம்பாட்டம் விளையாடப்படுகிறது.

## சடுகுடு

சடுகுடு என்பது பழந்தமிழரின் விளையாட்டாக அமைகிறது. இதனை இன்று 'கபடி' என்னும் பெயரால் அழைப்பர். இந்த விளையாட்டை இரண்டு பிரிவாகப் பிரிந்து நின்று விளையாடுவர் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குப் பாடிக்கொண்டு போகும்போது அப்பக்கத்திலுள்ளவரைத்

தொட்டுவிட்டுக் கோட்டைத்தாண்டி விட்டால் தொடப்பட்டவர் விளையாட்டிலிருந்து வெளியேறி விட வேண்டும்.

"கீத்துக் கீத்தடா

தென்னங் கீத்தடா

ஏறி உதைச் சண்டா

விழுந்து போச்சடா" (Kandasamy, (2022) Age 65, Informer, Salem, India)

## தாயம்

மகளிர் விளையாடும் விளையாட்டினை தாயம் என்பர். விளையாடுவதற்கு வரையப்படும் கட்டத்தினைத் 'தாயக்கட்டம்' என்றும் உருட்டும் பகடையைத் 'தாயக்கட்டை' என்றும் கூறுவர்.

"தாயம் என்பதற்கு உரிமை என்று பொருள். கட்ட விளையாட்டின் வளர்ச்சியே தாயம். போர்க்காலங்களில் ஒரு நாட்டிலிருந்து பிறிதோர் நாட்டிற்குப் படையெடுத்துச் செல்பவர் மலைப்பகுதிகளைத் தாண்டி செல்லும்போது வெட்டுதல், குத்துதல், மலை போன்ற சொற்கள் போரைக் குறிக்கும்" (Sanmugasundharam, 2001).

அதுபோன்ற இவ்விளையாட்டில் காய்களை வெட்டுதல, மலை போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி விளையாடுபவர். இருவர் எதிரெதிரே உட்கார்ந்து விளையாடுவர்.

கண்ணாமூச்சி

"கண்ணாமூச்சி ரே ரே

கண்டு பிடி ரே ரே

நல்ல முட்டைய தின்னுட்டு

ஊள முட்டைய கொண்டு வா"

கண்ணாமூச்சி அல்லது கண்ணைக் கட்டிக்கொண்டு விளையாடும் விளையாட்டு என்றும் கூறுவர். ஒருவர் கண்ணைப் பொத்திக்கொண்டு பாடலைப் பாடும்பொழுது மற்ற அனைவரும் ஒளிந்துக் கொள்வர். இறுதியில் ஒளிந்த ஒருவரைக் கண்டுபிடிப்பர் (Chellammal, (2022) Age 61, Informer, Salem, India).

## நொண்டி விளையாட்டு

ஒரு காலினைப் பயன்படுத்தி விளையாடும் விளையாட்டு ஆகும். ஒரு காலினை மடக்கிக் கொண்டும் ஒரு காலினை ஊன்றிக் கொண்டும் நொண்டியடித்து மற்றவர்களைத் தொடுவர். சிறுவர்கள் கிண்டல் செய்து விளையாடும் விளையாட்டாகவும் அமைந்துள்ளது.

## கல் விளையாட்டு

சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு. இந்த விளையாட்டினை 'அச்சாங்கல்' என்று வழக்கத்தில் குறிப்பிடுவர். இந்த விளையாட்டில் ஐந்து கற்கள் (அ) ஏழு கற்கள் வைத்து விளையாடுவர். "கல்லை மேலே தூக்கிப்போட்டு அது கீழேவந்து விழுவதற்கு முன்பாக கையால் தரையில் தட்டிக் கல்லைப் பிடிக்கும் விளையாட்டு. இதனைத் தட்டாங்கல் என்றும் கூறுவர்.

## கிட்டிப்புள்

ஒரு நீளக்குச்சி ஒரு சிறிய குச்சி ஆகிய இரண்டும் விளையாட்டுப் பொருள். இதில் சிறிய குச்சியைக் கிட்டி என்பர் நிலத்தில் சிறிதளவு பள்ளம் தோண்டி சிறிய குச்சியை அது மேல் வைத்து

பெரிய குச்சியால் அடிக்க வேண்டும். எதிரே உள்ளவன் அதனைப் பிடித்துவிட்டால் அடித்தவன் தோற்றவனாவான். பேச்சுவழக்கில் இதனை பிள்ளுக்குச்சி என்று கூறுவர்.

## பம்பரம்

பம்பரம் எனும் விளையாட்டுப் பொருளைக் கொண்டு ஆடும் ஆட்டத்திற்குப் 'பம்பர ஆட்டம்' என்று பெயர். ஒரு வட்டமிட்டு அதனுள் ஒரு பம்பரத்தை வைத்து அதனை வெளியேற்றுவர். வெளியேற்றியவுடன் அனைவரும் சாட்டையால் பம்பரத்தைச் சுற்றிக் கையால் எடுக்க வேண்டும். யார் எடுக்கவில்லையோ அவனது பம்பரத்தை வட்டத்தில் வைக்க வேண்டும். "பம்பரத்தைத் தரையில் ஆடவிடுவதுடன் கயிற்றில், உள்ளங்கையில் உச்சந்தலையில் நெற்றியில் என ஆடவிடுவர். சிலர் பம்பரத்தைத் தரையில் படாமலேயே கையில் எடுத்து விடுவர்"

## கோலிகுண்டு

இது குண்டு விளையாட்டு என்று கூறுவர். சிறுவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கோலிகுண்டை உருட்டி விளையாடுவர். ஒரு சிறுகுழி தோண்டி குறிப்பிட்ட தூரம் இருந்து குண்டை வீசுவர். அது குழிக்குள் விழ வேண்டும். இல்லையெனில் அவர்கள் தோற்றவராவர். "குழி தோண்டி ஆடுவது கோலிகுண்டு செவ்வகக் கட்டம் போட்டு விளையாடுவது பேந்தா எனப்படும்."

## திருடன் போலீஸ் விளையாட்டு

ஒரு குழுவாகச் சேர்ந்து விளையாடுவர். ஒருவன் தூங்குவது போல நடிப்பான். மற்ற சிறுவர்கள் தூங்கும் சிறுவனிடம் திருடுவது போன்று திருடிக்கொண்டு ஓடி ஒளிந்துகொள்வர். போலீசாக நடிக்கும் சிறுவனிடம் தூங்குவது போல நடித்த சிறுவன் முறையிடுவான். போலீசாக இருக்கும் சிறுவன் கண்டுபிடிப்பான். இவ்விளையாட்டு கள்ளன் போலீஸ் விளையாட்டு என்பர்.

## கால் தாண்டுதல்

கால் தாண்டுதல் என்பது சிறுவர் சிறுமியர் இருவரும் விளையாடுவர். ஒருவர் உட்கார்ந்துக் கொண்டு ஒரு காலை நீட்டுவர் பின் கால்மேல் வைப்பர். பின் கால்மேல் ஒரு கை வைப்பர். பின்னர் இரண்டு கைகளையும் வைப்பர். பிறகு குனிந்து நிற்பர் அவனை மற்றவர்கள் தாண்டுவர். "இவ்விளையாட்டைப் பச்சைக்குதிரை என்று கூறுவர்".

## முடிவுரை

நாட்டுப்புறவியல் மூலம் மக்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடுகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை அறியமுடிகிறது. நாட்டுப்புற மக்களின் பொழுதுபோக்காக விளையாட்டுகள், விடுகதை, பழமொழி, கதைகள், கதைப்பாடல்கள் போன்றவைகள் அமைகின்றன. இவற்றில் விளையாட்டுகளை மகளிர், ஆடவர், சிறுவர், சிறுமியர் ஆகியோரும் விளையாடினர். விளையாட்டுகளின் மூலம் மனிதனின் ஆற்றல் வளம் வளர்ச்சியடைகிறது. உடல் உழைப்பால் விளையாடும் விளையாட்டு, மூளையைச் சுறுசுறுப்பாக்கும் விளையாட்டு என அனைத்தும் அமைகிறது. மனிதனின் உடல் மட்டுமல்லாமல் மக்களின் உள்ளமும் மகிழ்ச்சியடைகிறது. விளையாட்டுக்களின் மூலம் மக்கள் தங்களுடைய கவலைகள், மனஅழுத்தம் போன்றவற்றை மறந்து சிறுவர்களோடும் பெரியவர்களோடும் விளையாடினர். மக்கள் நாட்டுப்புற இலக்கியங்களோடும் குறிப்பாக விளையாட்டுகளோடும் பின்னிப்பிணைந்திருக்கின்றனர்.

## References

Sakthivel, S. (2010) Naattuppura eyal aaivu, Manivasagar publications, Chennai, India.

Sanmugasundharam, S. (2001) Naattupuraviyal, Publisher: Kavya, Indhira Nagar, Bangalore, India.

Sivalinganar, A. (1985) Tolkappiyam uvamaiyiyal, International Institute of Tamil Studies, Chennai, India.

Subash Chandra Bose, S. (2016) Tholkappiyam Porulathikaram, New Century book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License